மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

நிலையறிபரீட்சை – 2021

செய்முறைத் தொழிநுட்பத் திறன்கள் –I,II

பெயர் ∴ சுட்டெண் :-	தரம் :- 6	நேரம் :- 2 மணித்தியாலம்

பகுதி 1

01) சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. கருத்தொன்றைத் தெரிவக்கப் பயன்படுவது
   1. குறியீடு 2. இலச்சினை 3. வடிவங்கள் 4. தளவுருக்கள்
2. தவிட்டரிசியில் காணப்படும் விற்றமின்
   1. விற்றமின் B2 2. விற்றமின் B6 3. விற்றமின் B1 4. விற்றமின் B12
3. நாளொன்றுக்கு உணவில் சேத்துக் கொள்ள வேண்டிய மரக்கறி வகைகளின் எண்ணிக்கை
   1. மூன்றுவகை 2. நான்குவகை 3. ஐந்துவகை 4. ஆறுவகை
4. அருகிலுள்ள குறியீடு குறிப்பது
   1. சமையலறை யன்னல் 2. சமையலறை சுவர்
   3. சமையலறைக் கதவு 4. உணவு சமைக்கும் அலகு



5. மூலிகைகளில் ஒன்றாக அமைந்து காணப்படுவது
   1. அகத்தி 2. கங்குன் 3. இறுங்கு 4. திப்பிலி
6. மண்ணைத் தூர்வையாக்கும் பிராணி
   1. மண்புழு 2. செண்பகம் 3. தவளை 4. ஆமைவண்டு
7. வெளி வரும் நாற்றம் காரணமாக பூச்சிகளை விரட்டும் தாவரம்
   1. கரட் 2. வெள்ளைப்பூடு 3. புதினா 4. தேசிக்காய்
8. மண்ணரிப்பைத் தடுக்கப் பயன்படும் உயிருள்ள மூடுபடைகளில் ஒன்றாகக் காணப்படுவது
   1. வைக்கோல் 2. மரத்தூசி 3. வல்லாரை 4. வாழைமடல்
9. இரவு முழுவதும் நீரில் ஊற வைத்து மறுநாள் நடப்படும் விதை
   1. பூசணி 2. தக்காளி 3. வெண்டி 4. பயறு
10. பின்வருவனவற்றில் உக்கலடையாத மூடுபொருள்
    1. கடதாசி 2. பொலித்தீன் 3. மரத்தூசி 4. உரிமட்டை

02) சரி பிழை இடுக.

1. தாவரங்கள் வளர்க்க எமக்கப் பொருத்தமான இடம் வீட்டுத் தோட்டமாகும். ( )
2. தானியங்களில் ஒன்றாகப் பயறு காணப்படும். ( )
3. கூட்டெரு கலப்பதால் மண் வளமடையும். ( )
4. நூடில்ஸ் தயாரிப்பில் கோதுமைமா, அரிசிமா போன்றன பயன்படுகின்றன. ( )
5. ஓட்டில் சாம்பல் நிறமான புள்ளிகள் காணப்படுதல் புதிய முட்டையின் இயல்பாகும். ( )

www.ikedu.lk

6. முறைசார் அல்லது முறைசாரா வடிவங்களை ஒன்று சேர்த்து இலட்சினைகளை உருவாக்க முடியும். ( )
7. மிக ஆழமாக மண்ணைப் புரட்டாத காரணத்தால் மண்ணுக்கு ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைக்கலாம். ( )
8. திட்டமிட்டு அமைக்கப்பட்ட சமையலறையில் வேலை செய்வது அதிக சிரமத்தை ஏற்படுத்தும். ( )
9. கிழங்கு, வெங்காயம் போன்றவற்றைக் களஞ்சியப்படுத்தும் போது காற்றோட்டமுள்ள உலர்வான இடத்தில் பரப்பி வைத்தல் வேண்டும். ( )
10. பூச்சிகளைக் கவரும் தாவரம் மிளகாய் ஆகும். ( )

(1× 10 =10 புள்ளிகள்)

03) தொடர்புபடுத்துக.

1. நத்தைகளை உண்ணும் பிராணி	முப்பரிமாணம்
2. உடலுக்குச் சக்தியை வழங்கம் போசணை	U வடிவம்
3. தானியங்களில் காணப்படும் போசணைச் சத்து	கொழுப்பு
4. நீளம், அகலம், உரம் கொண்டது	காபோவைதரேற்று
5. அதிக இடவசதி கொண்டது சமையலறை	செண்பகம்

(1×05=05புள்ளிகள்)

04) இடைவெளிநிரப்புக.

(பால், பொலித்தீன், கழுவும் தொட்டி, அரிமரம், இருபரிமாணத்தைக்)

1. யன்னல் இருக்குமிடத்தில்……..வைத்தல் வேண்டும்.
2. உயர் பாத்திக்கான சட்டகத்தை அமைக்க……பயன்படும்.
3. முறைசாரா வடிவங்கள்……கொண்டு காணப்படும்.
4. உணவைப் பொதி செய்ய……பயன்படும்.
5. விரைவில் பழுதடையக் கூடிய பொருள்……ஆகும்.

(3 + 4 + 4 + 4 =15புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி II

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

1) "கருத்துக்களை வெளிப்படுத்தும் ஊடகமாக தளவடிவங்களை இனங்காணலாம்"

   1. தளவடிவங்களின் வகைகள் எவை?
   2. இருபரிமாணத் தோற்றத்திற்கு உதாரணம் இரண்டு தருக.
   3. முறைசார் வடிவங்கள் இரண்டு தருக.
   4. புராதன காலத்தில் செய்திகளைப் பரிமாற மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் 03 தருக.

   (3 + 4 + 4 + 4 =15புள்ளிகள்)

2) "உடலின் சிறப்பான வளர்ச்சிக்கு உணவு அவசியம்"

   1. உணவின் தொழிற்பாடுகள் 02 தருக.
   2. சந்தையில் உணவைக் களஞ்சியப்படுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 02 தருக.
   3. தயாரிக்கப்பட்ட உணவுகள் மூலம் கிடைக்கும் நன்மைகள் 02 தருக.
   4. தானியங்களைப் பழுதடையச் செய்யும் உயிரங்கிகள் 02 தருக.
   5. புதிய மீன்களின் இயல்புகள் 02 தருக.

   (3 + 4 + 4 + 4 =15புள்ளிகள்)

3) "திட்டமிட்டு அமைக்கப்பட்ட சமையலறையில் செயற்படுவது இலகுவானதல்ல"

   1. திட்டமிட்டு அமைக்கப்பட்ட சமையலறையில் வேலை செய்யும் போது ஏற்படும் நன்மைகள் 02 தருக.
   2. உணவு தயாரிக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் 02 தருக.
   3. முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட சமையலறையின் இயல்புகள் 03 தருக.
   4. சமையலறையில் காணப்படும் வேலை முக்கோணங்கள் எவை?

   (3 + 4 + 4 + 4 =15புள்ளிகள்)

4) "வீட்டுத் தோட்டத்தை அமைப்பதன் மூலம் சூழலை அழகாகப் பேணலாம்"

   1. வீட்டுத் தோட்டம் என்றால் என்ன?
   2. வீட்டுத் தோட்டத்தில் தாவரங்களை வளர்ப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் 03 தருக.
   3. நேரடியாகப் பாத்தியில் வித்துக்களை நடக் கூடிய பயிர்கள் 02 தருக.
   4. சட்டகத்துடன் கூடிய உயர் பாத்தியில் பயிர் செய்வதால் பெற்றுக் கொள்ளக ் கூடிய நன்மைகள் 02 தருக.
   5. உயர் பாத்திக்கான சட்டகத்தை அமைக்கப் பயன்படும் பொருட்கள் 02 தருக.

   (3 + 4 + 4 + 4 =15புள்ளிகள்)

5) "இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி வீட்டுத்தோட்டம் செய்வோம்"

   1. நோய், பீடைத் தாக்கத்தைக் குறைக்க செய்யக்கூடிய எளிய சிகிச்சை முறைகள் 02 தருக.
   2. சரியான முறையில் களைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் 02 தருக.
   3. பூச்சிகளை உண்ணும் பிராணிகள் 02 தருக.
   4. தினமும் பயிர்களை அவதானிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளும் பயன்கள் 02 தருக.

   (3 + 4 + 4 + 4 =15புள்ளிகள்)

www.ikeou.lk